சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

முன்னிலை : திரு. M. சிவாஜி செல்லையா, L.L.M.,
சார்பு நீதிபதி, உத்தமபாளையம்.

2026 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 13 ம் நாள் வியாழக்கிழமை

**இந்து திருமண முதலேற்பு மனு எண்.195/2025**
**(CNR No. TNTH050006282025)**

ரம்யா .... **மனுதாரர்**

/எதிர்/

செல்வகணபதி .... **எதிர்மனுதாரர்**

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பு 23.07.2026 ம் தேதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.மா.காசிமாயன், B.Com, B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.E.செல்லபாண்டி, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைக்கு கேட்பு நல்கியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான:–

**உத்தரவு**

**1.** இம்மனுவானது மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 19.02.2018 ம் தேதி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து, இந்து திருமணச் சட்டம் 13(1)(i–a) பிரிவுகளின் கீழ் விவாகரத்து பரிகாரம் வழங்கக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரரின் மனுவின் சுருக்கம்:**

மனுதாரரும், எதிர்மனுதாரரும் காதலித்து வந்து, இருவீட்டார் சம்மதத்துடன் கடந்த 19.02.2018 ம் தேதியன்று கேரளாவில் உள்ள சந்தம்பாறை ஸ்ரீவிநாகயர் கோயிலில் வைத்து திருமணம் நடைபெற்றது என்றும், திருமண வாழ்வின் பயனாக கடந்த 13.01.2020 ல் மெகன்சி என்ற பெண்குழந்தை பிறந்தது என்றும், மனுதாரரும், எதிர்மனுதாரரும் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்த நிலையில், மனுதாரருக்கு

குழந்தை பிறந்த பின்பு தொழில் நிமித்தமாக கோம்பையில் தனிக்குடித்தனமாக வாழ்ந்து வந்தனர் என்றும், மனுதாரருக்கு அன்றாட செலவுக்குக்கூட பணம் கொடுக்காமல் எதிர்மனுதாரர் தினமும் குடித்துவிட்டு வந்து மனுதாரரை அடிப்பதை வாடிக்கையாக கொண்டிருந்தார் என்றும், மேலும், எதிர்மனுதாரர் வேறொரு பெண்ணுடன் தொடர்பிலும் இருந்து வருகிறார் என்றும், மேலும் கடந்த 2023ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மனுதாரரையும், அவரது குழந்தையையும் விட்டுவிட்டு எதிர்மனுதாரர் தனியாக சென்றுவிட்டார் என்றும், எனவே, இனிமேலும் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வது என்பது இயலாது என்ற நிலை ஏற்பட்டுள்ளதால், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்குமிடையே 19.02.2018ம் தேதி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்கக்கோரி மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

<u>3. எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:-</u>

மனுதாரரும், எதிர்மனுதாரரும் காதலித்து வந்து, இருவீட்டார் சம்மதத்துடன் கடந்த 19.02.2018ம் தேதியன்று கேரளாவில் உள்ள சந்தம்பாறை ஸ்ரீவிநாகயர் கோயிலில் வைத்து திருமணம் நடைபெற்றது என்பதும், திருமண வாழ்வின் பயனாக கடந்த 13.01.2020ல் மென்சி என்ற பெண்குழந்தை பிறந்தது என்பதும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. எதிர்மனுதாரர் இதுநாள்வரையில் மனுதாரருடன் சேர்ந்து வாழ இருந்துவந்த நிலையில், மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ எவ்வித உடன்படிக்கையும் இல்லாமல் இருந்து வருவதால், மனுதாரர் அவரது மனுவில் எதிர்மனுதாரருக்கு எதிராக கூறியுள்ள குற்றச்சாட்டுக்களை நீக்கி எதிர்மனுதாரர் மனுதாரர் கோரியுள்ள விவாகரத்து பரிகாரத்தை கொடுக்க தயாராக உள்ளார் என்று இந்த எதிருரையின் மூலம் தெரிவித்துக்கொள்கிறார்.

<u>4. சாட்சியம் :</u>

இம்மனுவில் மனுதாரர் ரம்யா ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் செல்வகணபதி எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக எ.ம.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5.** இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், மனுதாரர் விவாகரத்து கோரி தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்,

**6. தீர்வு :**

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது, வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த வழக்கு இறுதி விசாரணைக்கு வந்த போது, உபயமனுதாரர்கள் தரப்பிலும் திறந்த நீதிமன்றத்தில் இனிமேல் சேர்ந்து வாழ்வதற்கு வழி இல்லை என்றும், நீதிமன்றம் மூலமாக விவாகரத்து பெறுவது தான் இருவருடைய வாழ்க்கைக்கு சரியானதாக இருக்கும் என எடுத்துரைக்கப்பட்டது. அதை உறுதிப்படுத்தும் வகையில், மனுவின் மனுதாரர் ரம்யா ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, கடந்த 23.07.2026 ம் தேதியன்று தனது நீதிமன்ற சாட்சியத்தில்,

> " நான் எனது நகை பொருட்களை பெற்றுக்கொண்டேன். எங்களுக்குள் எந்த கொடுக்கல் வாங்கலும் கிடையாது. எனது மகள் மெகன்சி என்னுடைய பராமரிப்பில் தான் இருந்து வருகிறார். நாங்கள் கடந்த 3 ஆண்டுகளாக பிரிந்து வாழ்கிறோம். எனக்கு ஆயுட்கால ஜீவனாம்சம் தேவையில்லை. என் கணவர் மீது நான் என் மனுவில் கூறியுள்ள குற்றச்சாட்டுக்களை வாபஸ் வாங்கிக்கொள்வதால் என் கணவர் விவாகரத்து கொடுக்க சம்மதிக்கிறார் என்றால் சரிதான். என் மகளை ஒவ்வொரு மாதமும் நீதிமன்ற பணி நாளான முதல் சனிக்கிழமை உத்தமபாளையம் இலவச சட்ட உதவி மையத்திற்கு அழைத்து வந்து காலை 10 மணி முதல் 12 மணிவரை என் கணவர் என் மகளை பார்ப்பதற்கு சம்மதிக்கிறேன்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**7.** அதேபோல், இம்மனுவின் எதிர்மனுதாரரான செல்வகணபதி என்பவர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தன்னுடைய சாட்சியத்தில்,

> " நான் நகை பொருட்களை என் மனைவியிடம் கொடுத்து, அவர் பெற்றுக்கொண்டார். எங்களுக்குள் எந்த கொடுக்கல் வாங்கலும் கிடையாது. எனது மகள் மெகன்சி என் மனைவியின் பராமரிப்பில் இருப்பதற்கு எனக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது. நாங்கள் கடந்த 3 ஆண்டுகளாக பிரிந்து வாழ்கிறோம். என் மீது மனுவில் கூறியுள்ள குற்றச்சாட்டுக்களை என்

மனைவி வாபஸ் வாங்கி கொள்வதால் நான் விவாகரத்து கொடுக்க சம்மதிக்கிறேன் " என்று சாட்சியம் அளித்துள்ளார்.

8. ஆகையால், மேற்படி உபயமனுதாரர்களின் வாய்மொழி சாட்சியத்தை பரிசீலனை செய்யும் போது, அவர்கள் இனிமேல் சேர்ந்து வாழ வழி இல்லை என்பதும், திருமணம் நடந்த 19.02.2018 ம் தேதிக்குப்பின்னர் அவர்களுக்குள் தொடர்பிரச்சனைகள் ஏற்பட்டு, கடந்த 3 வருடகாலமாக பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்பது வழக்காவணங்களை பரிசீலனை செய்யும் போது தெரிய வருகிறது. மேலும், எதிர்மனுதாரர் தனது வாய்மொழி சாட்சியம் மூலம். தனது மகள் மெகன்சி தன் மனைவியின் பராமரிப்பில் இருப்பதற்கு தனக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது என்றும், தன் மீது மனுவில் கூறியுள்ள குற்றச்சாட்டுக்களை தன் மனைவி வாபஸ் வாங்கிக்கொள்வதால், விவாகரத்து கொடுக்க சம்மதிக்கிறேன் என சாட்சியமளித்துள்ளார். அதேபோல், மனுதாரர் தனக்கு ஆயுட்கால ஜீவனாம்ச தொகை எதுவும் தேவையில்லை என்றும், தன் மகளை ஒவ்வொரு மாதமும் நீதிமன்ற பணி நாளான சனிக்கிழமை அன்று உத்தமபாளையம் இலவச சட்ட உதவி மையத்திற்கு அழைத்து வந்து காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை என் கணவர் என் மகளை பார்ப்பதற்கு சம்மதிக்கிறேன் எனக்கூறியுள்ள நிலையில், இம்மனுவில் தீர்வு காண வேண்டிய பிரச்சனை எதுவும் இல்லை என்பது தெரிய வருகிறது.

9. எனவே, உபயமனுதாரர்கள் கடந்த 3 வருடங்களுக்கும்மேலாக பிரிந்து வாழ்ந்து வருவதை கருத்தில் கொண்டும், உபய மனுதாரர்களுக்கு கடந்த 19.02.2018 ல் கடந்த திருமண பந்தத்தை ரத்து செய்து விவாகரத்து பரிகாரம் வழங்குவது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் தீர்மானித்து இந்த மனு பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**10. முடிவாக, இம்மனு கீழ்க்கண்டவாறு அனுமதிக்கப்படுகிறது.**

(i) மனுதாரர் இந்து திருமணச் சட்டம் பிரிவு 13(1)(i–a)ன் கீழ் விவாகரத்து கோரி தாக்கல் செய்த மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 19.02.2018 அன்று நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து (Divorce) வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**(ii)** உபயமனுதாரர்களின் மகள் மெகன்சியை ஒவ்வொரு மாதமும் நீதிமன்ற பணிநாளான முதல் சனிக்கிழமை அன்று உத்தமபாளையம் இலவச சட்ட உதவி மையத்தில் வைத்து காலை 10.00 மணிமுதல் 12.00 மணிவரை எதிர்மனுதாரர் தன் மகளை பார்ப்பதற்கு மனுதாரர் சம்மதிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

**(iii)** செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரி பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 13.08.2026 ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.08.13 18:42:00 +0530

**சார்பு நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u> :

ம.சா.1 ... ரம்யா – மனுதாரர்

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :–</u>

ம.சா.ஆ.1 ... 19.02.2018 ம் தேதியிட்ட திருமண அழைப்பிதழ் –அசல்
ம.சா.ஆ.2 ... புகைப்படம் – அசல்
ம.சா.ஆ.3 ... ம.சா.1 ன் ஆதார் அடையாள அட்டையின் நகல்
ம.சா.ஆ.4 ... மனுதாரரின் மகள் மெகன்சியின் பிறப்பு சான்றிதழ் – நகல்

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி :–</u>

எ.ம.சா.1 ... செல்வகணபதி – எதிர்மனுதாரர்

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :</u>

எ.ம.சா.ஆ.1 ... எ.ம.சா.1 ன் ஆதார் அடையாள அட்டையின் நகல்

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.08.13 18:42:11 +0530

**சார்பு நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

Sub Court, UPM
O.P.195/2025
Fair Order
Dated.13.08.2026

**சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்**
**முன்னிலை : திரு. M. சிவாஜி செல்லையா, L.L.M.,**
**சார்பு நீதிபதி, உத்தமபாளையம்.**

**2026 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 13 ம் நாள் வியாழக்கிழமை**

**இந்து திருமண முதலேற்பு மனு எண்.195/2025**
**(CNR No.TNTH050006282025)**

தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, கோம்பை காந்திஜி தெரு, 15–3–50 ல் வசித்து வரும் இந்து, வயது 31 உள்ள செல்வகணபதி அவர்களின் மனைவி ரம்யா

.... **மனுதாரர்**

/எதிர்/

கேரளா மாநிலம், இடுக்கி மாவட்டம், பூப்பாறை, ஆனையிரங்கள், ஆனையிரங்கள் போஸ்ட் என்ற முகவரியில் வசித்து வரும் இந்து, வயது 42 உள்ள முருகன் அவர்களின் குமாரர் செல்வகணபதி .... **எதிர்மனுதாரர்**

-

இம்மனுவானது மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 19.02.2018 ம் தேதி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து, இந்து திருமணச் சட்டம் 13(1)(i–a) பிரிவுகளின் கீழ் விவாகரத்து பரிகாரம் வழங்கக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கலான நாள்: 18.08.2025

நீதிமன்ற முத்திரைக் கட்டணம் : ரூ.50/– செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பு 23.07.2026 ம் தேதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.மா.காசிமாயன், B.Com, B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.E.செல்லபாண்டி, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைக்கு கேட்பு நல்கியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான:–

<u>நிறைவேற்றாணை</u>

**(i)** மனுதாரர் இந்து திருமணச் சட்டம் பிரிவு 13(1)(i–a)ன் கீழ் விவாகரத்து கோரி தாக்கல் செய்த மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 19.02.2018 அன்று நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து (Divorce) வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**(ii)** உபயமனுதாரர்களின் மகள் மெகன்சியை ஒவ்வொரு மாதமும் நீதிமன்ற பணிநாளான முதல் சனிக்கிழமை அன்று உத்தமபாளையம் இலவச சட்ட உதவி மையத்தில் வைத்து காலை 10.00 மணிமுதல் 12.00 மணிவரை எதிர்மனுதாரர் தன் மகளை பார்ப்பதற்கு மனுதாரர் சம்மதிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

**(iii)** செலவு தொகை இல்லை.

<u>செலவு தொகை பட்டியல் : இரு தரப்பிலும் தாக்கல் செய்யப்படவில்லை.</u>

2026 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 13 ம் நாள் எனது கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

M SHIVAJI CHELLIAH

Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.08.13 18:42:23 +0530

**சார்பு நீதிபதி,**
**உத்தமபாளையம்.**